**தம்பலகமம் பிரதேச சபை - 2022**

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தம்பலகமம் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வரவு செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தம்பலகமம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டில் ரூபா 143,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 02 அச்சுப்பொறிகளின் பெறுமதி மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு நிதிக் கூற்றில் சரிசெய்யப்படும். | கணக்குகள் சரி செய்ய வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடனிற்கு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 180,000 இனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டு நிதிக் கூற்றில் சரிசெய்யப்படும். | கடன் மற்றும் வட்டி தொடர்பில் சரியான தொகைகள் கணக்கீடு செய்ய வேண்டும். |
| இ) | உள்ளூராட்சி மன்றங்களின் இயலுமையை கட்டியெழுப்புதல் செயற்திட்டத்தின் கீழ் சபைகளின் திண்மக்கழிவு முகாமைத்துவம் மற்றும் சேதனப்பசளை உற்பத்தி தொடர்பான செயற்பாட்டிற்கு உதவியளித்தலிற்கென கிடைத்திருந்த ரூபா 144,750 | நாட்டின் ஏற்பட்ட நிலைமையின் மீது இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியவில்லை. | உதவி குறித்த நோக்கத்திற்காக பயன்படத்தப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | யினை உரிய நோக்கத்திற்கு செலவழிக்கப் பட்டிராமல் மீளாய்வாண்டுச் செலவினமாகவும் சென்மதியாகவும் காட்டப்பட்டிருந்தன. | | |
| ஈ) | உள்ளூராட்சி திணைக்களம், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களம் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தினால் மீளாய்வாண்டில் அன்பளிப்புச் செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 718,234 ஆன பொருட்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | குறித்த ஆண்டினுள் கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உரித்துறுதிகள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடுகள் இல்லாமை காரணத்தால் ரூபா 92,571,415 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்வதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | காணி மற்றும் கட்டிடங்களிற்காக உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் பெறப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| | **ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைச் சட்டங்களிலுள்ள ஏற்பாடுகள்** | | | |
| **(அ)** | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| **(i)** | பிரிவு 126 vii , <u>ஊ</u> | பிரதேச சபையின் எல்லைக்குள் அமைக்கப் பட்டுள்ள விளம்பரப் பலகைகளுக்கான கட்டணங்களை | 2022 ஆம் ஆண்டிற்கான கட்டணங்களினை அறவீடு செய்ய பொருத்தமான நடவடிக்கைகளை வருமான பரிசோதகர் மூலம் மேற்கொள்ள | சட்ட ஏற்பாடுகளிற்கமைய துணை விதி விதிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறவீடு செய்வதற்கு துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| **(ii)** | பிரிவு 182 | நிலுவை இறைச்சிக்கடை வாடகை ரூபா 754,423 ஆளுநரின் அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | ஆளுநரின் அங்கீகாரத்தை கோரப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை பதிவழிக்க முன்னர் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வெண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவை** | | | |
| | நி.பி 1646 | சபைக்குச் சொந்தமான 16 எண்ணிக்கையான ஓட்ட நிலையிலுள்ள வாகனங்களுக்கு நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் உரிய காலங்களில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாண விதிகளிற்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானங்கள் ரூபா 2,317,203 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 8,461,631 ஆகும்

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் * | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் * | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” |
| i) வீதவரியும் வரியும் | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| ii) வாடகை | 13,150 | 5,804 | 5,450 | 4,028 | 14,500 | -- | 10,230 | 3,674 |
| iii) உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,200 | 704 | 710 | 145 | 1,503 | -- | 963 | 151 |
| iv) ஏனைய வருமானம் | 1,722 | 995 | 995 | -- | 2,341 | -- | 522 | - |
| | **16,072** | **7,503** | **7,155** | **4,173** | **18,344** | **--** | **11,715** | **3,825** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **அ) வீதவரி மற்றும் வரி** | | |
| 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கு அமைய பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றம் அடைந்த பிரதேசங்களை பெயரிடப்பட்டு வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதவரி அறவிட ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளது. | முன்னேற்றம் அடைந்த பிரதேசங்களிலிருந்து விதவரி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| **ஆ) வாடகை** | | |
| i) 3 வருடத்திற்கு அதிக காலமாக நிலுவையாக காணப்பட்ட வாராந்தச் சந்தை வாடகைக் கட்டணம் ரூபா 121,200 ஆனது. | நிலுவை உடனே செலுத்துமாறும், நிலுவை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை வருமானம் அறவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| **இறைச்சிக்கடை** | | |
| ii) 2017 முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இறைச்சிக்கடை குத்தகையாக பெறவேண்டிய தொகை ரூபா 3,906,962 ஆனது. | எதிர்காலத்தில் குறித்த நிலுவையினை பெற்றுக் கொள்ள பொருத்தமான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவை இறைச்சிக்கடை வாடகை அறவிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| **(இ) முத்திரைக் கட்டணங்கள** | | |
| மாகாண சபையின் பிரதிச் செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம ரூபா 4,082,928 ஆனது. உரிய திகதிக்கு முத்திரைக்கட்டணம் | 2018ம் ஆண்டு முதல் 2021 வரையான காலப்பகுதிக்கான முத்திரைத்தீர்வு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி 81 பிரகாரம் முத்திரைக் கட்டணம் அறவிட்டுக்கொள்ள வேண்டும் |

பெறுவதற்கு தவறியமையின் காரணமாக 2020 இற்கு முற்பட்ட காலத்திற்கு அறவிடவேண்டிய தொகை மாகாண நிதியத்தின் வருமானத்திற்கு தாக்கல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| அ) | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டில் அலுவலக கட்டட நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 18,341,778 கடன் தொகை மற்றும் 2021 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 4,476,269 இனை கொடுத்துத் தீர்க்க சபையினால் இவ் அறிக்கைத் திகதி வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திடம் பெறப்பட்ட கடன் மற்றும் அதற்கான வட்டியும் செலுத்தப்படாது உள்ளது சபையின் வருமானம் மிக குறைவாகக் காணப்படுவதனாலே ஆகும். எனினும் குறித்த கடன் கொடுத்து தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் மற்றும் வட்டியினை செலுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| ஆ) | சேதனப்பசளை உற்பத்திக்கென 2021 ஆம் ஆண்டு ரூபா 1,000,000 பெறுமதியான நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், சபைக்கு உரித்தல்லாத காணியில் இதற்கான வேலைத்தளத்தினை அமைப்பதற்கு ரூபா 803,520 செலவிடப்பட்டுள்ளது. இதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,500,000 கிரயமுடைய சேதனப்பசளை தயாரிக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச சபை வளாகத்தில் பயனேதுமின்றி வைக்கப்பட்டிருந்தது. | பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை பயன்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| i) | ரூபா 5,978,814 இற்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள தம்பலகமம் பிரதேச சபையின் பொதுச்சந்தைக் கட்டிடத்தினை வாடகைக்கு வழங்கி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் நிமித்தம் தொடர்ந்தும் கேள்வி கோரல் மூலம் அக்கட்டடத்தினை வாடகைக்கு வழங்கி வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியாமல் போனதுடன், 2023 ஆம் ஆண்டு வருமானத்தை பெற்றுக் கொள்ளும் நோக்காக கொண்டு கேள்வி கோரப்பட்ட போதும், குறித்த சந்தைக் கட்டடத் தொகுதியை | சொத்துக்களிலிருந்து வருமானத்தை பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | பெற்றுக்கொள்ள எவரும் முன் வரவில்லை. | |

3.3 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | பிரதேச சபைக்குச் சொந்தமான 04 வாகனங்கள் பாவனையற்ற நிலையில் இருப்பதுடன் திருத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எமது சபைக்கு சொந்தமான திருத்தத்திற்குட்படுத்தப்பட வேண்டிய 07 வாகனங்களுள் மூன்று வாகனம் தற்போது பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மிகுதியாக காணப்படும் வாகனங்களின் திருத்தங்கள் சபையின் நிதி நிலைமைகளைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் காலங்களில் பாவனைக்குட் படுத்தப்படும். | பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| ஆ) | மீளாய்வாண்டில் பிரதேச சபைக்கு அன்பளிப்பாக கிடைத்த 02 வாகனங்களில் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் வாகனங்களில் உரிமைகள் சபையின் பெயருக்கு மாற்றம் செய்து பெற்றுக் கொள்ளவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்ட்டு வருகின்றது. | பிரதேச சபையின் பெயரிற்கு உரிமை மாற்றப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| இ) | பிரதேச சபையில் 23 வாகனங்கள் காணப்படுகின்ற போதிலும் 08 வாகனங்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது பாவனை வாகனங்கள் அனைத்திற்கும் எதிர்வரும் நாட்களில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறுமதி மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| பாதிடப்பட்ட செலவுகளிற்கும் உண்மையான செலவினத்திற்குமிடையே 10 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் ஆனதால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது. | கடந்த ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெடுக்கடியினால் ஏற்பட்ட விலையேற்றமும் வருமானத்தில் அறவிடுவதில் ஏற்பட்ட சிக்கல் நிலைமைகள் காரணமாகவே இவ்வாறான நிலை இடம்பெற்றுள்ளது. | பாதீடானது தர்க்க ரீதியல் தயாரிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**4.2 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையினால் மாதமொன்றுக்கு அண்ணளவாக 30 தொன் அளவில் அதன் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் அறுவைச்சாலையில் அறுக்கப்படுகின்ற கால்நடைகளின் கழிவுகள் A6 கண்டி வீதி, சிங்ககந்த எனும் காட்டுப்புறப் பகுதியில் வகைப்படுத்தப்படாது கொட்டுப்பட்டு வருகின்றமையால் யானைகள் மற்றும் ஏனைய விலங்குகளிற்கு பாதிப்பானதாகவும் சூழல் மாசடைவதற்கு ஏதுவாக அமைகின்றது. | சபைக்கென பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை முடிவுற்றவுடன், சேகரிக்கும் குப்பைகளை வகைப்படுத்திக் கொட்டுவதோடு சூழலும் மாசுறாது ஏனைய விலங்குகளுக்கும் பாதிப்பில்லாத வகையிலும் இதனை பயன்படுத்த முடியும். | சுற்றாடல் பாதுகாப்பினை நோக்காகக் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |